Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ ஆனி மீ 12 ஆம் உ செவ்வாய்க்கிழமை (26 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஂ 2 ஓசை 128

## யாழ். நகர தாக்குதலுக்கு பாதுகாப்பு அமைச்சு சமாதானம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கோட்டை முகாமை விடுதலைப்புலிகளின் முற்றுகையில் இருந்து விடுவிக்க நேற்றுக்காலை இராணுவ விமானப்படை கூட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

கோட்டைக்குள் இருக்கும் படையினரின் தொகையை அதிகரிக்கவும், அங்கு காயமடைந்த இராணுவத்தினர்களுக்கு சிகிச்சையளிக்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

## புதிய முகாம்கள் சில திறப்பு; பழைய முகாம்கள் சில மூடல்!

(மட்டக்களப்பு)


கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறை, அக்கரைப்பற்று, கல்முனை, பொத்துவில், கோமாரி ஆகிய பகுதிகளில் புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுவாஞ்சிக்குடி, கும்புறுமுனை, ஆகிய இராணுவ முகாம்கள் அகற்றப் பட்டுள்ளன,

அத்தோடு கிரான் இராணுவ முகாமும் பலமான தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதால் இம் முகாமும் கைவிடப்படவேண்டி வரலாம் என பி. பி. ஸி. தெரிவித்தது.

## கோட்டை முகாமிற்கு உதவி வழங்கப் பேச்சுவார்த்தை

யாழ். டச்சுக்கோட்டையில் தங்கியிருக்கும் 273 பொலிஸாருக்கும் சிப்பாய்களுக்கும் மருந்து உணவு என்பன வழங்கவும் காயமடைந்தவர்களை வெளியே கொண்டு செல்லவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறார்கள். இதேவேளை உணவுப் பொதிகளை விமானத்திலிருந்து கோட்டைக்குள் போடவும் விடுதலைப் புலிகளின் நிலைகளின் மீது தாக்குதலை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் தீவிரமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.



நேற்று அதிகாலை இரண்டு மணியிலிருந்து யாழ். நகரில் சிறிலங்கா விமானப்படை விமானங்களும், ஹெலிகொப்ரர்களும் குண்டுவீசித் தகர்த்த நவீனசந்தைக் கட்டடத்தையும், முட்டாஸ்கடைச் சந்தியிலுள்ள கடைகளையும் படங்களிற் காணலாம்.

# யாழ்நகரில் குண்டு வீச்சு, ஷெல் அடி, சூடு; சந்தை சேதம், கடைகள் தீக்கிரை, பலர் காயம்

## அதிகாலை 2 மணிக்கு சிறிலங்காப் படைகள் அட்டகாசம்; படுக்கையிலிருந்த மக்கள் துடித்துப் பதைத்து ஓட்டம்!

(நமது விஷேட நிருபர்)
(யாழ்ப்பாணம்)

## படகு சேதம்

(விசேட நிருபர்)

நேற்றுக்காலையும், பகலும் நடைபெற்ற முப்படைத் தாக்குதலுக்கு இலக்காகி குருநகர் யூதாத தேயு ஆலயப் பகுதிக் கடலில் விடப்பட்டிருந்த படகொன்று பாரிய சேதத்திற்கு உள்ளானது.

குருநகரைச் சேர்ந்த இரகோரி அரியராசா என்பவரது இயந்திரப்படகே விமானப்

## ஆவணங்களைப் பாதுகாக்க

## வீடு சேதம்

# சந்தை சேதம், கடைகள் தீக்கிரை, பலர் காயம்

# அதிகாலை 2 மணிக்கு சிறிலங்காப் படைகள் அட்டகாசம்; படுக்கையிலிருந்த மக்கள் துடித்துப் பதைத்து ஓட்டம்!

(நமது விஷேட நிருபர்)
(யாழ்ப்பாணம்)

அதிகாலை இரண்டு மணியிலிருந்து நேற்று யாழ்நகரில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன, ஹெலியிலிருந்து கண்மூடித்தனமாகச் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகமும் கோட்டை இராணுவம் ஷெல் அடியும் காலை எட்டேமுக்கால்வரை விடாமல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

## ஆவணங்களைப் பாதுகாக்க கல்விப்பணிப்பாளர் கட்டளை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலைகளால் மூடப்பட்ட பாடசாலைகளின் பிரதான ஆவணங்கள் பெறு பேற்று அட்டவணைகள், பிறப்புச் சான்றிதழ்கள் கொடுப்பனவு தொடர்பான ஆவணங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பான இடங்களில் வைக்குமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேவையேற்படுமிடத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் யுத்தத்தை நிறுத்தும்வரை போர்

**- ரஞ்சன்**

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் விடுதலைப்புலிகள் யுத்தத்தை தொடர்ந்து நீடிக்கும் வரை ஸ்ரீலங்கா படையினரும் இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து நீடிப்பார்கள் என்று அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணா தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தால் மட்டுமே இனி அவர்களுடன் எந்தவிதமான பேச்சுக்களும் நடைபெறும் என்றும் அவர் சொன்னரார்.

## வட - கிழக்கு மாகாண சபை பற்றிய முடிவு விரைவில்!

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது சம்பந்தமாகவும் இம்மாகாண சபைக்குப் புதிய தேர்தல் நடத்துவது சம்பந்தமாகவும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விரைவில் நடவடிக்கை எடுத்து அறிவிக்கவிருக்கிறார். இத்தகவலை பெருந்தோட்டத்துறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்று உள்நாட்டு வெளிநாட்டுப்பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## நவீன சந்தைப் பகுதி இடிந்தது; கடைகள் எரிந்தன

யாழ் நகரில் பெரியகடைப் பகுதியில் நவீன சந்தைக்கட்டிடத்தின் ஒருபகுதி குண்டு வீச்சில் இடிந்ததுடன் தீப பிடித்தும் எரிந்தது. நவீன சந்தைக்கு எதிர்ப்புறம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ராஜா கட்டிடத்தின் ஒரு பகுதியும் இடிந்தது.

பெரியகடை பிரதான பஸ் நிலையத்துக்கு எதிரேயுள்ள பூடாலசிங்கம் புத்தகக் கடை தவிர்ந்த பல கடைசள் குண்டு வீச்சில் தகர்ந்தன 1977 ஆம் ஆண்டிலும் இதேபேலியிலுள்ள கடைகள் சிறிலங்கா பொலிஸ்படையினரால் முற்றாக எரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தீயணைப்புப் படைமீதும் சுட்ட ஹெலி; புலிகள் விரட்டினர்

நேற்று விமானப்படையின் குண்டுவீச்சினால் தீப்பிடித்த கடைகளை அணைப்பதற்காக உதவிக்குவந்த மாநகர சபை தீயணைப்புப்படை வாகனத்தையும் ஹெலிதரத்திச் சுடுவதற்கு எத்தனித்த போது விடுதலைப்புலி வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஹெலியை விரட்டியடித்தனர்.

## ஜக்கி வீரமரணம்

யாழ்நகர் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலின்போது விடுதலைப்புலிகளைச் சேர்ந்த ஜக்கி வீர மரணமடைந்தார். வல்வெட்டித்துறையைப்பிறப்பிடமாகக் கொண்ட இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## குண்டுவீச்சு நேரத்தில் திருட்டு

ஷெல், ஹெலி, பொம்மர், எரிகுண்டு விமானங்கள் தாக்குதலில் மக்கள் அகதிகளாக வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து சென்றுள்ள போது வீடுகளை உடைத்துத் திருட்டு இடம்பெற்றது.

நேற்றுக் காலை நடைபெற்ற விமானத்தாக்குதல் வேளை குருநகர் பற்றிக் அப்புக்காத்து என்பவரது வீடுதிருடர்களால் உடைக்கப்பட்டிருக்கிறது.

வீட்டில் இருந்த பெறுமதி வாய்ந்த இயந்திரப் பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (21)

## வீடு சேதம்

(விசேட நிருபர்)

வெள்ளிக்கிழமை (22-6-90) இரவு யாழ்-கோட்டை இராணுவம் ஷெல்லடித்ததில் குரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படுக்கையில் கிடந்த மக்கள் துடித்துப் பதைத்து ஓட்டம்

நேற்று அதிகாலை இரண்டு மணிக்கு திடீரென ஹெலிகள் துப்பாக்கிப்பிரயோகமும் விமானப்படை விமானங்கள் குண்டு வீசித்தாக்கவும் தொடங்கியதும் படுக்கையில் கிடந்த மக்கள் துடித்துப் பதைத்து எழுந்து குழந்தைகளையும் தூககிக் கொண்டு அருகேயுள்ள கோயில்களையும் பாடசாலைகளையும் நோக்கி ஓடினர்.

அதிகாலையிலிருந்து எட்டேமுக்கால் வரையும் பின்னர் நண்பகலிலும், பிற்பகலிலும், மாலையிலுமாக விமானங்கள் குண்டு வீசியும் ஹெலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கோட்டை இராணுவ முகாம் ஷெல் அடித்தும் நகரைக்கலக்கிக் கொண்டிருக்க,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கில்

## ஒரு வாரத்துக்குரிய உணவே கையிருப்பில் உள்ளது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு ஒரு வாரத்துக்கு போதுமான உணவுப் பொருட்களே கையிருப்பில் உள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சரித்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிகளில் போக்குவரத்து சீர்குலைவுகளும் நீடிக்கின்றன. வைத்திய உதவிகளையும் உடனடியாக அனுப்பிவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

## அரச அதிபரைச் சந்திக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நிலைமைகளால் யாழ். செயலகம் இயங்காத நேரங்களில் நிவாரண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படகு சேதம்

(விசேட நிருபர்)

நேற்றுக்காலையும், பகலும் நடைபெற்ற முப்படைத் தாக்குதலுக்கு இலக்காகி குருநகர் யூதாத தேயு ஆலயப் பகுதிக் கடலில் விடப்பட்டிருந்த படகொன்று பாரிய சேதத்திற்கு உள்ளானது.

குருநகரைச் சேர்ந்த கிரகோரி அரியராசா என்பவரது இயந்திரப்படகே விமானப் படைத் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுவர் வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சேதமடைந்தவீட்டை திருத்தியமைப்பதற்கான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கந்தையா வைத்திலிங்கம் (46 வயது) என்பவர் அந்த வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததால் அதனுள் அகப்பட்டு நசுங்கி மரணமானார்.

இப்பரிதாபமான சம்பவம் மானிப்பாய் உடுவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பின் வீதியில் நேற்று ஒரு மோட்டார் சைக்கிளும், எல்வ்வானும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை ஐந்தரை மணியளவில் கொண்டா C 90 மோட்டார் சைக்கிளில் வந்த தாவடியைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு படுகாயமடந்தவர்களாவர்.

(ம)

## தமிழர் பிரச்சினை பற்றி ஆராய வாழைப்பாடி தலைமையில் குழு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகவும், அது குறித்து பின்பற்றவேண்டிய அணுகுமுறைகள்பற்றி ஆராய்வதற்கு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழைப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சித்தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ்காந்தி எட்டுப்பேர் கொண்ட இக்குழுவை நியமனம் செய்துள்ளார்.

இலங்கைத்தமிழர் பிரச்சினையால் தமிழ் நாட்டின் சட்டம், ஒழுங்கு நிலைமை அபாயகட்டத்திற்கு சென்றுள்ளதாக வாழைப்பாடி ராமமூர்த்தி செய்தியாளரிடம் கூறினார்.

## நிலைமைகள் சீரானால்தான் வட-கிழ மாகாணசபை தேர்தலாம்

(கண்டி)

வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைப்பதற்கான சட்டமூலம் ஜூலை மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று பொது நிர்வாக மாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலைமை சீரானதும் மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். நகர்மீது அகோரக்குண்டுவீச்சு; கடைகள்: வீடுகள் பாடசாலை சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை இராணுவ முகாமினதும், ஸ்ரீ லங்கா விமானப் படையின் கோர மான தாக்குலுக்கும் நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து நேற்று மாலை

2. 30 மணிவரையும் யாழ் நகரம் கலங்கியது. இத் தாக்குதலில் வியாபார ஸ்தாபனங்கள், பாடசாலைகள், வீடுகள் என்பன பலத்தசேதத் திற்கு உள்ளாகின.

நேற்று முன்தினம் நள்ளிரவு கோட்டை இராணுவ முகாமில் இருந்துஆரம்பிக்கப்பட்ட ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து அதிகாலை 3.30 மணியளவில் விமானப்படையின் தாக்குதலும் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. காலை 5.30 மணியளவில் இருந்து விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதலின் போது மொத்தம் ஆறு விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. இதில் நான்கு விமானங்கள் குண்டு வீச்சு விமானங்களாகும். இரண்டு விமானங்கள் நெறிப் படுத்தலுக்காகப் பயன்படுத் தப்பட்டவை அவ்ரோ விமானங்கள் ஆகும். அத்தோடு ஹெலிகப்டர்களும் துப்பாக்கிப் பிரயோகமும் மோட்டார் தாக்குதலும் மேற்கொண்டன.

இத்தாக்குதல்கள் பிரதானமாக யாழ். நகரப்பகுதி கச்சேரி பழைய பூங்கா, யாழ். இந்து மகளிர் கல்லூரி என்பன தாக்குதலுக்கு உள்ளாகின.

யாழ் நகரப் பகுதியில் இத் தாக்குதலின் போது 50 மேற்பட்ட வியாபார ஸ்தாபனங்கள் முற்றாகச் சேதமுற்றன. யாழ் நவீனசந்தைக் கட்டிடத்தின் மத்திய பகுதி பெரும் சேதத்திற்குள்ளாகியது. இப் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் சென்ற பிறகும் கடைகளின் பிடித்திருந்த தீ எரிந்கொண்டிருந்ததால்யாழ் மாநகர சபையின் தீயணைக்கும் இயந்திரம் துணை கொண்டு அத் தீ கட்டுப் பண்ணப் பட்டது.

பஸ் நிலையத்திற்கு முன்பாக இருந்த சிறு தேனீர் கடைகளும், பழக்கடைகளிலும் பெரும் பாகம் முற்றாகச் சேதமடைந்தன.

முட்டாஸ் கடைச் சந்திப் பகுதியில் நிகழ்ந்த விமானக் குண்டு வீச்சால் 10 மேற்பட்ட கடைகள் சேதமடைந்தன.

யாழ் இந்துமகளிர் கல்லூரியும் விமானக் குண்டுவீச்சிற்கு இலக்காகியது இத்தாக்குதலினால் பாடசாலையின் கட்டிடத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

யாழ் பழைய பூங்காமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறிதவறியதனால் கச்சேரி கிழக்கு வீதியிலுள்ள ஒரு ஆசிரியர் வீட்டில் வீழ்ந்ததால் வீடுமுற்றாகச் சேதமடைந்தது.

வண்ணார்பண்ணையில்மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பி. ஏ. தம்பி லேனில் ஒருவீடு முற்றாகச் சேதமடைந்தது அத்தோடு ஐந்துக்கு மேற்பட்ட வீடுகள்சேதமடைந்தன

## தெ. ப. பொ. கூ. சங்கங்கள் மாநாடு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இயங்கிவரும் தெங்குப் பனம்பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் இன்றைய நிலை பற்றி ஆராய்வதற்கான மாநாடு எதிர்வரும் 27ஆம் திகதி காலை 10 மணியளவில் திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் தற்காலிகமாக இயங்கி வரும் கூட்டுறவு உதவி ஆணையாளரின் திணைக்களத்தில் இடம் பெறும்,

சங்கங்களின்முகாமையாளர்களும், கூ. அ. உத்தியோகத்தர்களும், அபிவிருத்தி மேற்பார்வையாளர்களும் மாநாட்டில் பங்குபற்றும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள்.

## யாழ். நகரமக்கள் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஞாயிறு இடம் பெற்ற பொம்பர், ஹெலி தாக்குதல்களை அடுத்து யாழ். நகரப் பகுதியில் இருந்து டிராக்டர்களிலும், லான்ட்மாஸ்டர்களிலும் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவதியுறும் மக்களிடம் இருந்து கணிசமான பணமும் வாகனங்கள் வைத்திருப்போர் பெற்றுக் கொள்கின்றனர்.

## கிராமசேவகர் பிரிவு மூன்றானது

(கொழும்புத்துறை)

இருபாலை கிராம சேவையாளர் பிரிவு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது கோப்பாய் உதவி அரசாங்க

## முஸ்லிம் லீக் கவலை தெரிவித்துள்ளது

(கொழும்பு)

கடந்த சில தினங்களுக்கு முன் ஈரானில் நடைபெற்ற பூமி நடுக்கத்தினால் ஏற்பட்ட உயிர் இழப்புக்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

அண்மையில் ஈரானிய மதத் தலைவர் அயுத்துல்லா கொமேயினியின் நினைவு தினத்தை முன்னிட்டு இக் குழுவின் சார்பில் [illegible]லர் ஈரானுக்கு சென்றமை [illegible]றிப்பிடத் தக்கது.

## கண்காட்சியும் கருத்தரங்கும்

(கொழும்புத்துறை)

பிரித்தானிய கவுன்ஸில் நூலகம் யாழ். பல்கலைக்கழக நூலகத்தோடும்இலங்கைநூலகசங்கத்துடனும் இணைந்து நடாத்தும் கண்காட்சியும், கருத்தரங்கும் எதிர்வரும் ஜுலை மாதம் மூன்றாம், நான்காம், ஐந்தாம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில்பங்குபற்ற விரும்பும் நூலகங்கள், உள்ளூராட்சிமன்றம் - கல்லூரிகள் தமது விண்ணப்பங்களை உதவிநூலகர்,வாசகர்சேவை, யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு சுயவிலாசம் எழுதப்பட்ட முத்திரை ஒட்டப் பட்ட தபால் உறையைஅனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(24

## ஹெலி சுட்டு மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை கள்ளியங்காட்டுப்பகுதியில் யாழ் கச்சேரி சமூக சேவைப்பகுதியில் கடமையாற்றும் ஊழியரான செல்வி நாகேஸ்வரி நடராசா ஹெலி சூட்டினால் பலத்த காயமுற்று மரணமானார் ஏழாலை வாசியான இவர் அப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதியில் வந்து தமது உறவினர் ஒருவரது வீட்டில் தங்கியிருந்த சமயமே இத் துர்ப்பாக்கிய சம்பவம் இடம் பெற்றது.

## மட்டுநகரில் காய்கறிக்கு நெருக்கடி

(மட்டுநகர்)

மட்டுநகர் பகுதியில் இப் பொழுது காய்கறிகளின் விலை விஷம்போல் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு செல்கின்றது. நேற்று முன்தினம் ஒரு கிலோ கத்தரிக்காய் இப் பகுதியில் எண்பது ரூபாயாகவும் ஒரு கிலோ பயிற்றங்காய் எழுபது ரூபாய்க்கும் சந்தைகளில் விற்கப்பட்டன. இந்த விலையேற்றங்கள் காரணமாக இடம் பெயர்ந்த பொது மக்களும் வருமானம் குறைந்த

# A/L இரசாயனம்

### பரீட்சை மாதிரி வினாக்களும் விடைகளும்

### பொது இரசாயனம் - அசேதன இரசாயனம்

அமைப்பு வடிவ வினாக்கள்

### தொடர் - 5

### சத்தீஸ்

### பரீட்சை மாதிரி வினாத்தாள் 3 இன் விடைகள்

விடை 1

1. (a) (i) W பூச்சியக்கூட்டம்

(ii) அயனாக்கற் சக்தி தரவுகளில் இருந்து R, T, Q. என்பன முறையே கூட்டம் I, II, III மூலகங்கள்.

இவை அடுத்தடுத்த மூலகங்கள் ஆதலால் W கூட்டம் IV அல்லது பூச்சிய கூட்டத்திற்கு உரியது ஆகும். W இன் 1ம் அயனாக்கற்சக்தி ஒப்பீட்டளவில் மிகவும் உயர்வானது. ஆகவே W கூட்டம் IV மூலகம் அல்ல. பூச்சிய கூட்ட மூலகம் ஆகும்.

(b) (i) NaCl இல், $Na^+$, $Cl^-$ அயன்களிற்கிடையே வலிமையான நிலையின் கவர்ச்சி விசைகள் எல்லாத் திசைகளிலும் பரந்து இருப்பதால் பல அயன்கள் இணைந்து விறைப்பான அயன் ராட்சத சாலகமாக காணப்படும். உடைக்க, கூடிய சக்தி தேவை.

(ii) $CCl_4$ சிறிய, தனி மூலக்கூறு இவற்றுக்கிடையே வலிமை குறைந்த வந்தர்வால் கவர்ச்சி விசைகள் மட்டும் காணப்படும் இவற்றை மீறக் குறைந்த சக்தியே போதுமானது

(iii) MgO, ஏற்றம் $Mg^{++} > Na^+$, பருமன் $Mg^{++} < Na^+$ ஆகவே MgO இல் அயன்கள் வலிமையான நிலை மின் கவர்ச்சியால் பிணைக்கப்படும்.


(c) 1. பங்கீட்டு வலு பிணைப்பு + ஐதரசன் பிணைப்பு

2. பங்கீட்டு வலு பிணைப்பு + வந்தவால் கவர்ச்சி

3. உலோகப் பிணைப்பு

(d) (i) $NH_4^+$ இல் N இல் −5 இலத்திரன், 4H இல் −4 இலத்திரன்கள் ஒரு நேர் ஏற்றம் இருப்பதால் ஒரு இலத்திரன் குறைக்கப்படும் ஆகவே மைய அணுவை சுற்றி மொத்த இலத்திரன் எண்ணிக்கை 8.

மொத்த இலத்திரன் 8 / மைய அணுவை சுற்றி 4 சோடி இலத்திரன்கள் / 4லும் பிணைப்பு சோடியாக இருக்கும். ஆகவே வடிவம் நான்முகி.




$NH_2^-$ இல் N இல் −5 இலத்திரன், 2H இல் −2 இலத்திரன், ஒரு எதிர் ஏற்றம் — ஒரு இலத்திரன் அதிகம். ஆகவே மைய அணுவைச் சுற்றி மொத்த இலத்திரன் 8

மொத்த இலத்திரன் 8 / மைய அணுவைச் சுற்றி 4 சோடி இலத்திரன்கள் / 2

பகுதியில் இருந்து டிராக்டர் களிலும், லான்ட்மாஸ்டர்க ளிலும் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்கின் றனர்.

அவதியுறும் மக்களிடம் இருந்து கணிசமான பணமும் வாகனங்கள் வைத்திருப்போர் பெற்றுக் கொள்கின்றனர்.

## கிராமசேவகர் பிரிவு மூன்றானது

(கொழும்புத்துறை)

இருபாலை கிராம சேவை யாளர் பிரிவு மூன்று பிரிவுக ளாகப் பிரிக்கப்பட்டுள்ளது கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இரு பாலை புதிதாகப் பிரிக்கப் பட்ட மூன்று கிராம சேவை யாளர் பிரிவுகளுக்கும் மூன்று கிராமசேவை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாகப் பிரிக்கப்பட்ட இடங்கள் இருபாலை வடக்கு இருபாலை தெற்கு, கல்வியங் காடு என்பனவாகும் (24)

## முஸ்லிம் லீக் கவலை தெரிவித்துள்ளது

(கொழும்பு)

கடந்த சில தினங்களுச்கு முன் ஈரானில் நடைபெற்ற பூமி நடுக்கத்தினால் ஏற்பட்ட உயிர் இழப்புக்கு அகில இல ங்கை முஸ்லிம் லீக் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரி வித்துள்ளது.

அண்மையில் ஈரானிய மதத் தலைவர் அயுத்துல்லா கொ மேயினியின் நினைவு தினத் தை முன்னிட்டு இக் குழு வின் சார்பில் சிலர் ஈரா னுக்கு சென்றமை குறிப்பிடத் தக்கது.

நூலகத்தோடும்இலங்கைநூல கசங்கத்துடனும் இணைந்து நடாத்தும் கண்காட்சியும், கருத்தரங்கும் எதிர்வரும் ஜூலை மாதம் மூன்றாம், நான்காம், ஐந்தாம் திகதிக ளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில்பங்குபற்ற விரும்பும் நூலகங்கள், உள்ளூ ராட்சிமன்றம் - கல்லூரி கள் தமது விண்ணப்பங்களை உதவிநூலகர்,வாசகர்சேவை, யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு சுயவிலாசம் எழு தப்பட்ட முத்திரை ஒட்டப் பட்ட தபால் உறையைஅனுப் பிப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24

# உள்ளூர் மரக்கறிகளின் பாவனை அதிகரித்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற் போது உள்ளூர் மரக்கறி களின் பாவனை அதிகரித் துள்ளது. அத்துடன் வாழைப் பழம் கிலோ ஐந்து ரூபாவா கவும், வெங்காயம் கிலோ முப்பது ரூபாவாகவும் குறைந் துள்ளது.

தென்பகுதி மரக்கறி வகை கள் வராததால் கீரை வகை கள், மரவள்ளிக் கிழங்கு, வாழைப்பொத்தி என்பன சந்தைகளில் விற்கப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது.

தென் பகுதிக்கு றால் பத னிட்டு அனுப்ப முடியாததால் அதன் விலையும் குறைந்துள் ளது.

## இணக்க மன்றுகள்

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேசத்தை சேர்ந்த சுதுமலை, ஆனைக் கோட்டை. நவாலி ஆகிய இடங்களில் இணக்க மன்று கள் ஆரம்பிக்கப்பட்டு 24-6-90 தொடக்கம் செயல் படத் தொடங்கியுள்ளன.

பொதுமக்களிடையேயுள்ள பிணக்குகளைத் தீர்த்து வைப் பதுடன் அவர்களிடையே புரிந்துணர்வுகளையும், நல்லு றவுகளையும், வளர்க்க இம் மன்றுகள் உதவியாக இருக் கும்.

பிரதி ஞாயிற்றுக்கிழமை யில் காலை 9.00 மணிக்கு இம்மன்றுகள் விசாரனை களைத் தொடங்கும் இணக்க மன்றில் ஏழு பேர்வரை கட மையிலீடுபடுவார்கள் (19)

பெற்றது.

## மட்டுநகரில் காய்கறிக்கு நெருக்கடி

(மட்டுநகர்)

மட்டுநகர் பகுதியில் இப் பொழுது காய்கறிகளின் விலை விஷம்போல் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு செல் கின்றது. நேற்று முன்தினம் ஒரு கிலோ கத்தரிக்காய் இப் பகுதியில் எண்பது ரூபாயாக வும் ஒரு கிலோ பயிற்றங்காய் எழுபது ரூபாய்க்கும் சந்தை களில் விற்கப்பட்டன. இந்த விலையேற்றங்கள் காரண மாக இடம் பெயர்ந்த பொது மக்களும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்களும் பெருமள வில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்மாவட்டத்தில் இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது ஊனமுற்ற பத்துப் பேருக்கு யாழ். சர்வோதய அமைப்பினால் முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இச்சயிக்கிள்களைப் பெற் றுக்கொண்ட பத்துப்பேரும் வடபகுதியின் பல பிரதேசங் களையும் சேர்ந்தவர்களாவர் ஒவ்வொரு சைக்கிளும் ஏறக் குறைய ஐயாயிரம் ரூபாய் பெறுமதியுடையதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (24)

## தங்கப் பதக்கம்


(கொழும்புத்துறை)

கொழும்பு இந்து கலாசார தமிழ்மொழி அமு லாக்கப்அலுவல்கள் அமைச்சு அண்மையில் நடாத்திய பேச்சு, கட்டுரை பண்ணிசைப் போட்டியில் வழங்கப்பட்ட ஒன்பது தங்கப்பதக்கங்களில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆறுதங்கப் பதக்கங் களைப் பெற்றுள்ளது.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற இப்போட்டிக ளில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பு விழா அண்மையில் கொழும்பில் சிறப்பாக நடை பெற்றது.


தங்கப் பதக்கங்களைப் பெற்ற மகா ஜனக் கல்லூரி மாணவர்களின் முழு விபரம் பின்வருமாறு :- செல்வன் மு. சதீஸ்பால முரளி-பேச்சு, செல் வன், ந. மகேஸ்வரன்- கட் டுரை, செல்வி. ச, கௌசீ தசி- கட்டுரை, செல்வி ஏ, வானதி கட்டுரை; செல்வி. ம. லதாங்கி- பண்ணிசை, செல்வி. சி. சிவ ரதி- பண்ணிசை. (24)

மொத்த இலத்திரன் 8 / மைய அணுவை சுற்றி 4 சோடி இலத்திரன்கள் / 4 லும் பிணைப்பு சோடியாக இருக்கும். ஆகவே வடிவம் நான்முகி.



$NH_2^-$ இல் N இல் —5 இலத்திரன், 2H இல் —2 இலத்திரன், ஒரு எதிர் ஏற்றம் — ஒரு இலத்திரன் அதிகம். ஆகவே மைய அணுவைச் சுற்றி மொத்த இலத்திரன் 8

மொத்த இலத்திரன் 8 / மைய அணுவைச் சுற்றி 4 சோடி இலத்திரன்கள் / 2 பிணைப்புச் சோடியாகவும் 2 தனிச்சோடியாகவும் இருக்கும் / ஆகவே வடிவம் கோணல்.



(ii) $NH_4^+ + NH_2^- \rightarrow 2NH_3$
$NH_4^+$ அமிலம் (புரோத்தன் வழங்கி) / $NH_2^-$ மூலம் (புரோத்தன் வாங்கி)

(e) (i) $Sr^{90}$ இன் திணிவு கதிர் வீசலால் அரைவாசியாகத் தேய்வடைவதற்கு எடுக் கும் காலம் 28 வருடங்கள்

(ii) கதிர்த் தொழிற்பாட்டுக் கோலம்.

$$4 \xrightarrow{t\,1/2} 2 \xrightarrow{t\,1/2} 1$$

எனவே கதிர்த்தாக்க வலிமை பாதுகாப்பான எல்லையை அடைவதற்கு 2 அரை உயிர்க் காலங்கள் தேவைப்படும். ஆகவே மக்களைப் பாதுகாப்பதற்கு பொறுத்திருக்க வேண்டிய காலம் = 28 × 2 = 56 வருடம்.

அப்பகுதியில் உள்ள Sr மாதிரிகளை சேகரித்து அகற்றல்.

(தொடரும்)


# புடைவை மின்தறி நிலையம்

* மின்தறியில் வேலைசெய்து அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் தேவை
* அனுபவமற்றவர்களுக்கும் வேதனத்துடன் பயிற்சி அளிக்கப்படும்
* தங்குமிட வசதிகள் உண்டு

நேரில் வரவும்

# லீனா ரெக்ஸ் இன்டஸ்ரி

(லங்கா) லிமிடெட்

புத்தூர்.

(B/1181)



வெளிநாடுகளிலும், கொழும்பிலும் உள்ள உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக கடிதங்கள், புத்தகங்கள், பார்சல்கள், தஸ்தாவேஜுக்கள்

ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்

DHL WORLDWIDE EXPRESS

# D. H. L. International Ltd;

C/o. **Cosmos Marketing Services**

331, Kasthuryar Road, Jaffna.

(B 965)

### சிந்தனைக்கு

ஒழுக்கமும், தனிப்பட்ட ஆற்றலும் மட்டுமே மதிப்புள்ள முதலீடுகள்.

– வால்ட் விட்மன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 26-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## இவர்கள் வாழத்தான் வேண்டுமா?

“பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததாம்” என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது.

“கொதிக்கும் நீரிலிருந்து பொரியும் தட்டுக்கு” என்று இதே அர்த்தம் கொண்ட ஆங்கிலப் பழமொழியும் உண்டு.

ஆனால் தமிழ்ப் பழமொழி தமிழனுக்கே உரித்தானது. பழமொழி ஆனாலும் இன்றும் அது புதுமொழியாகவே இருந்து வருகிறது.

சிறிலங்கா சிங்கள இராணுவத்தின் கெடுபிடிகள் சிங்களக் காடையர்களின் அட்டூழியங்கள், போக்குவரத்துக் கஷ்டங்கள் இத்தனை தொல்லைகளையும் கடந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்துவிட்டோமென்று ஆறுதலுடன்வந்துசேரும் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களும் தொல்லைகளும் “பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததாம்” என்ற பழமொழியைவிட மோசமானவையாகும்.

சேரநீவில் பஸ் மாறி ஏறிய இரு இளம் பெண்களின் சூட்கேஸ்களும்பஸ்ஸின் கூரைமீதுவைக்கப்பட்டிருந்ததாம்.

யாழ்ப்பாணம் நல்லூரில் இப்பொழுது தற்காலிகமாக இயங்கும் பஸ் நிலையத்தில் இந்த இருபெண்களும் இறங்கிய போது பஸ்ஸின் மேலே வைக்கப்பட்டிருந்த இரண்டு சூட்கேஸ்களும் மாயமாய் மறைந்துவிட்டன.

உடுபிடவைகளும்தாங்கள் தேடிய நகைகளும்ரொக்கப் பணமும் அவற்றுள் இருந்தனவாம்.

அகதிகளாக அல்லப்பட்டு உயிரைக் காப்பாற்றும் பொருட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இரு பெண்களும் அபலைகளாக்கப்பட்டனர். இந்தப் பெருமை நமது தமிழ்ச் சகோதரர்களுக்கே உரியது.

சிறிலங்கா சிங்கள இராணுவத்துக்கும் சிங்களக் காடையர்களுக்கும் உயிர்தப்பி இங்கு வந்து சேரும் அகதிகளுக்கு நேரும் அனர்த்தங்கள் அநேகம்.

போக்குவரத்துச் சேவையில் மினிபஸ்காரர் புளிமூட்டை அடுக்குவது போல் மக்களை வாகனங்களில் ஏற்றுவதும் அவர்களுடைய பொருள்களை கண்டபடி ஏற்றுவதும் நினைத்தபடி அவர்களிடம் கட்டணம் அறவிடுவதுடன் அவர்களின் பொருள்கள் தொலைந்தால் அதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று அடாவடித்தனமாக நடந்து கொள்வதும் “தமிழ்ப் பண்பாட்டுக்கு” எடுத்துக்காட்டு!

பஸ்நிலையத்தில் வந்திறங்கியதும் ஓட்டோ வாகனக்காரர்களும் வாடகைக் கார்க்காரர்களும் கெடுபிடிகள் ஏராளம்!

அகதிகளாக வரும் மக்கள் பட்டுவரும் துன்பங்களுக்கு ஆறுதல் கூறி அவர்களை உபசரித்து வரவேற்க வேண்டிய தமிழ்ச் சகோதரர்கள் அவர்களிடம்

# ஆக்கிரமிப்பு யுத்தத்தை விடுதலை யுத்தத்தால்

# எதிர் கொள்வோம்

### தொடர்ச்சியாக இராணுவப் பிரயோகம்

சிங்கள இனத்தின் அரசியல் தலைவர்களும், சிறி லங்கா அரசும் 1950 களில் இருந்து இன்றுவரை தமிழ் மக்களின் மேல் இராணுவ பலப் பிரயோகம் செய்து வருவதினையே தமது நோக்கமாய் கொண்டுள்ளனர். தமிழ், முஸ்லிம் மக்களினுரிமைக்குரல்கள் அவர்கள் செவிப்பறைகளில் பட்டுவிட்டால் போதும் உடனே அவர்கள் சன்னதம் கொள்கிறார்கள். தமது இராணுவத்தை ஏவி விடுகிறார்கள் இதுதான்இவர்களின் தொடர்ச்சியான வரலாறாகவுள்ளது. இது மாத்திரமல்ல அடித்து முடித்தபின் ஒத்தணமும் கொடுத்து, அரைகுறை நிவாரணமும் கொடுத்து, அரசாங்க பதவிகள் என்னும் சில எலும்புத் துண்டுகளையும் கொடுப்பார்கள்; அதைத்தொடர்ந்து தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினை ஒருஅரசியற்பிரச்சினை என தாம் உணர்ந்து விட்டதாகவும், தமக்கு ஞானோதயம் பிறந்துவிட்டதாகவும் பாவ மன்னிப்பும் கோருவார்கள்.

### உரிமைக்குரலை அடக்க வெளிநாட்டு உதவி

தமது சொந்த இராணுவ பலத்தைப் பிரயோகித்துத் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைக் குரலை அடக்க எடுத்த முயற்சி பலிக்காது போகவே அமெரிக்கா, இஸ்ரேல், பிரித்தானியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிடம் இருந்து ஆயுத உதவியும், நிபுணத்துவ உதவியும் பெற்றார்கள். இதுவும் போதாமல்போகவே இந்தியமத்தியரசிடம்தஞ்சம்புகுந்தார்கள். தமிழ், முஸ்லிம் மக்களை அடக்கும் பொறுப்பை அதனிடம் ஒப்படைத்தார்கள் தனது சொந்த நாட்டிலேயே பலதேசியஇனங்களை அடக்கி ஒடுக்கி வரும் இந்திய மத்திய அரசு இக் கடமையை விருப்பமுடன் ஏற்றுக் கொண்டது. அழைப்பு விடப்பட்ட அடுத்த கணமே தமிழ், முஸ்லிம் மக்களைக் கொடூரமாக அடக்கத்தொடங்கியது. இந்திய மத்திய அரசால் வெற்றிபெற முடிந்ததா இல்லை.

### இந்திய அரசால் தாக்குப் பிடிக்க முடியவில்லை

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழ், முஸ்லிம் மக்கள்மேற்கொண்ட தேசபக்த தற்பாதுகாப்பு யுத்தத்தின் முன்னால் இந்திய மத்திய அரசால் நின்றுபிடிக்க முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டது. மிகக் குறுகிய கால யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ளலாம் என கருதியமை முற்றிலும் தவறு என்பதை சிறி லங்கா அரசும், இந்திய மத்தியஅரசும் புரிந்துகொள்ள ஆரம்பித்தன. ஆகவேஇந்திய மத்திய அரசின் இராணுவம் ஒரு நீண்ட காலத் திட்டத்துடன் இலங்கையில் தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதை உணரத் தொடங்கினார்கள். அடுத்த பக்கத்தில் இந்திய மத்தியரசானது தமிழ் ஈழப் பிரச்சினையை ஒரு சாக்குப் போக்காக கொண்டு முழு இலங்கையையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொணர முனைகிறது என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். இதன் காரணத்தால் இந்திய இராணுவமே வெளியேறு என்ற முழக்கம் சிங்கள மக்கள் மத்தியிலும் ஜனரஞ்சகமாகியது. சிங்கள மக்கள், இந்திய இராணுவத்திற் கெதிரான சளையாத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவர் பிரபாகரனையும் தமது நண்பர்களாகவும், தேசிய வீரர்களாகவும் நோக்கத் தொடங்கினார்கள். யு. என். பி கட்சியை தேசத் துரோகிகளின் கட்சியாக நோக்கவும் ஆரம்பித்தார்கள்.

### எதிர் பார்த்த நிலைமை

இவ்விதமானதொரு நிலைமை இவ்வளவு விரைவாக உருவாகும் என்பதை எதிர்பார்த்திராத சிங்கள தலைவர்கள் அதிர்ச்சியுற்றார்கள். தமது தலைமை பறிபோவதைக் கண்டு திகில் கொண்டார்கள். தமது தலைமைத்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான துரித முயற்சியில் ஈடுபடத்தொடங்கினார்கள்.

### மகாலிங்கம்

1989 ஜூன் மாதம் இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என பிரேமதாசா முடிக்கிட ஆரம்பித்ததுவும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நேசக்கரம் நீட்ட ஆரம்பித்ததுவும் இம் முயற்சியின் விளைவுகளேயாகும். இவை உண்மையிலேயே யு. என். பி யின் அபிலாசைகள் அல்ல, மாறாக யு. என். பி யில் கசப்புற்ற சிங்கள மக்களின் அபிலாசைகளேயாகும். சிங்கள மக்கள் இனப்பிரச்சினை பொறுத்து தமதும், தமது தலைவர்களினதும் தவறான போக்கினை நன்றாக புரிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். தமிழ். முஸ்லிம் மக்கள் இந்திய தேசவிஸ்தரிப்பின் பகடைக் காய்கள் அல்ல என்பதையும் பதிலாக அவர்கள் தேசவிஸ்தரிப்பிற்கு எதிரான காவற் கோபுரங்கள் என்பதையும் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். ஆகவே அவர்கள் தமிழ், முஸ்லீம் மக்களுடனும், தமிழ் ஈழ விடுதலைபுலிகள் இயக்கத்துடனும் தமிழ் ஈழக்கோரிக்கையானது சிங்கள மக்களுடன் பகைமையை வளர்த்துக் கொள்வதற்கான ஒரு கோரிக்கையல்ல; மாறாக சிங்கள மக்களுக்கும் தமிழ்மொழி பேசும் மங்களுக்கும் இடையில்இன சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு நட்புறவை ஏற்படுத்திக் கொள்வதை ஊக்குவிக்கும் ஒரு ஸ்திர அரசியல் நிலையைத் தோற்றுவிப்பதற்கான ஒரு கோரிக்கையேயாகும் என்பதைப் புரிந்து கொண்ட த. ஈ. வி. பு. இயக்கமும் தனது பதில்நேசக்கரத்தை நீட்டியது.

சிங்கள இனத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பிரேமா அரசுடன் நிபந்தனை எதற்கும் உட்படாத முறையிலான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை இலங்கை மக்கள் அனைவராலும் வரவேற்கப் பட்ட ஒரு விடயமாக இருந்தது. இலங்கையில் தமிழ்-முஸ்லீம்- சிங்கள நேச உறவு ஏற்படுவதற்கான அரசியல் ஆரம்பமாகவே முழுமக்களும் இப்பேச்சுவார்த்தையை நோக்கினார்கள்.

### மக்களுக்கு எதிராக யு. என். பி.

ஆனால், யு. என். பி அரசு இலங்கை மக்களின் அனைவரினதும் அபிலாசைகளுக்கு எதிராகவே செயற்பட்டது. அது பேச்சு வார்த்தையில் கபடத்தனமாகவே நடந்து கொண்டது. இனப்பிரச்சினையை அரசியல ரீதியில் தீர்ப்பதற்கான ஒரு மேடையாக இதைப் பயன்படுத்தவில்லை மாறாக சிங்கள பேரினவாத எழுச்சியை மீழக் கொணர்வதற்கான ஒரு கால அவகாசமாகவே இதைப்பயன் படுத்த முயற்சி செய்து வந்துள்ளார்கள். இதற்கு அவசியமான காலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பேச்சு வார்த்தை என்று கூறி காலங் கடத்துவதற்கான ஒரு முயற்சியே நடைபெற்றுள்ளது.

### நிரந்தர தீர்விற்கான யோசனை

பேச்சுவார்த்தையின் அடிப்படை நோக்கம் ஐக்கிய இலங்கையின் கீழ் இனப்பிரச்சினைக்கு சுமுகமாக தீர்வுகாண்பது என்பதேயாகும். சுய நிர்ணய உரிமை உடையவர்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் தமது பாரம்பரிய பிரதேசமாக கொண்டவர்கள் என்ற இரு அடிப்படை விடயம் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்திலேயே நிரந்தர தீர்வு சாத்தியமானதாகும்.

### காலம் கடத்தும் தந்திரம்

சுய-நிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. என்பது யாப்பு ரீதியாக உத்தரவாதப் படுத்தப்பட வேண்டுமானால் முதலில் பிரிந்து போகக் கோருவது சட்ட விரோதமானது என்று பிரகடனப்படுத்தும் இலங்கையின் அரசியல் யாப்பின் 6வது திருத்தப்பிரேரணைநீக்கப்பட வேண்டும். இதுதான் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அடிப்படையான அரசியல் கோரிக்கையாகும். இக் கோரிக்கை இன்றுவரை நிறைவேற்றப்படவும் இல்லை. இதற்கான எந்த முயற்சியையும் அரசாங்கம் தனது பக்கத்தில் இருந்து மேற்கொள்ளவும இல்லை. காலங்கடத்தலே நடந்துள்ளது. ஈரோஸ் இதற்கான வாக்கெடுப்பு பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாகக் கொடுத்த முன்னறிவித்தல் ஏற்படுத்திய பயந்தான் தற்போதைய யுத்தத்திற்கு காரணமாய். இருக்கலாம். யு. என் பி கட்சியே இப்பிரேரணையை முன் வைத்து இதை வெற்றிகொள்ளப்பண்ண ஏன் முயற்சிக்கக் கூடாது. இம் முயற்சி தோல்வி காணுமானால் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வைத்தால் என்ன? அதிலும் தோல்வி என்றால் ஐக்கிய இலங்கை சாத்தியமற்றது, நீங்களே உங்கள் முடிவை எடுத்துக்கொள்ளுங்கள் என அறிவிக்கவேண்டியது தானே. எதற்காக இந்த காலங்கடத்தல்.

(தொடரும்)

### இந்திய - பாகிஸ்தான் உறவை மேம்படுத்த

# அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க

# இந்தியா தயாராக உள்ளது

தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அளித்துவரும் ஆதரவு குறித்தே பிரதானமாக ஆரா

உள் விவகாரங்களிலும் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை என்றும் கூறினார்.

பணமும் அவற்றுள் இருந்தனவாம்.

அகதிகளாக அல்லப்பட்டு உயிரைக் காப்பாற்றும் பொருட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இரு பெண்களும் அபலைகளாக்கப்பட்டனர். இந்தப் பெருமை நமது தமிழ்ச் சகோதரர்களுக்கே உரியது.

சிறிலங்கா சிங்கள இராணுவத்துக்கும் சிங்களக் காடையர்களுக்கும் உயிர்தப்பி இங்கு வந்து சேரும் அகதிகளுக்கு நேரும் அனர்த்தங்கள் அநேகம்.

போக்குவரத்துச் சேவையில் மினிபஸ்காரர் புளிமூட்டை அடுக்குவது போல் மக்களை வாகனங்களில் ஏற்றுவதும் அவர்களுடைய பொருள்களை கண்டபடி ஏற்றுவதும் நினைத்தபடி அவர்களிடம் கட்டணம் அறவிடுவதுடன் அவர்களின் பொருள்கள் தொலைந்தால் அதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று அடாவடித்தனமாக நடந்து கொள்வதும் ''தமிழ்ப் பண்பாட்டுக்கு'' எடுத்துக்காட்டு!

பஸ்நிலையத்தில் வந்திறங்கியதும் ஓட்டோ வாகனக்காரர்களும் வாடகைக் கார்க்காரர்களும் கெடுபிடிகள் ஏராளம்!

அகதிகளாக வரும் மக்கள் பட்டுவரும் துன்பங்களுக்கு ஆறுதல் கூறி அவர்களை உபசரித்து வரவேற்க வேண்டிய தமிழ்ச் சகோதரர்கள் அவர்களிடம் கொள்ளையடிப்பதும், ஏமாற்றி மோசடி செய்வதும், குழந்தைகளின் பசியைத் தீர்ப்பதற்கு அவசரத்துக்கு வாங்கும் குளிர்பானம் மற்றும் உணவுப்பண்டங்களில் கொள்ளை இலாபமடிப்பதும் கொடுமையிலும் கொடுமை.

சிறிலங்கா சிங்கள இனவாதப்படைகள் இராணுவ முகாமிலிருந்து ஷெல் அடித்தும், ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் விமானத்திலிருந்து குண்டு வீசியும் தாக்கியும் அட்டூழியம் புரியும் சமயத்தில் மக்கள் படும் அல்லல் தொல்லைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் தமிழ்ச் சகோதரர்களுமதிகம்.

குண்டு விழுந்தோ, ஹெலிசூட்டிலோ, ஷெல் அடியிலோ வீடு அல்லது வர்த்தக நிலையம் தாக்கப்பட்டால் உதவிக்கென்று ஓடி வருபவர்கள்பலர், வீட்டுக்காரரையோ கடைக்காரரையோகூட இவர்கள் உள்ளே நுழையவிடாமல் மிக அக்கறையுடன் 'தொண்டு' செய்வார்கள்.

''வெந்த வீட்டில் பிடுங்கியது அறுதி'' என்ற மனப்பான்மையை இவர்கள்அங்கிருந்து போனபின்னர்தான் 'அவர்கள்' செய்த உதவியின் தாக்கம் தெரியும்.

''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்றும் தமிழ்ப்பண்பாட்டுக்கு உலகில் நிகரில்லை'' என்றும் பெருமை பேசிக்கொள்கிறோம்.

மேலே குறிப்பிட்ட ஈனச்செயல்களில் ஈடுபடுபவர்களும் தமிழர்கள்தான். இப்படியும் தமிழன் என்று பெயர் கொண்டு வாழத்தான் வேண்டுமா?

களை அடக்கும் பொறுப்பை அதனிடம் ஒப்படைத்தார்கள் தனது சொந்த நாட்டிலேயே பலதேசியஇனங்களை அடக்கி ஒடுக்கி வரும் இந்திய மத்திய அரசு இக் கடமையை விருப்பமுடன் ஏற்றுக் கொண்டது. அழைப்பு விடப்பட்ட அடுத்த கணமே தமிழ், முஸ்லிம் மக்களைக்

மக்கள். இந்திய இராணுவத்திற் கெதிரான சளையாத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவர் பிரபாகரனையும் தமது நண்பர்களாகவும், தேசிய வீரர்களாகவும் நோக்கத் தொடங்கினார்கள்.

திய தேசவிஸ்தரிப்பின் பகடைக் காய்கள் அல்ல என்பதையும் பதிலாக அவர்கள் தேசவிஸ்தரிப்பிற்கு எதிரான காவற் கோபுரங்கள் என்பதையும் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்தார்கள். ஆகவே அவர்க தமிழ்,முஸ்லீம் மக்களுடனும், தமிழ் ஈழ விடுதலைபுலிகள் இயக்கத்து

துள்ளார்கள். இதற்கு அவசியமான காலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பேச்சுவார்த்தை என்று கூற, காலங் கடத்துவதற்கான ஒரு முயற்சியே நடைபெற்றுள்ளது.

**நிரந்தர தீர்விற்கான யோசனை**

பேச்சுவார்த்தையின் அடிப்

னால் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வைத்தால் என்ன? அதிலும் தோல்வி என்றால் ஐக்கிய இலங்கை சாத்தியமற்றது, நீங்களே உங்கள் முடிவை எடுத்துக்கொள்ளுங்கள் என அறிவிக்கவேண்டியது தானே. எதற்காக இந்த காலங்கடத்தல். (தொடரும்)

## இந்திய - பாகிஸ்தான் உறவை மேம்படுத்த

# அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க

# இந்தியா தயாராக உள்ளது

## விமான நிலையத்தில் வி. பி. சிங்

(டில்லி)

இந்திய-பாகிஸ்தான் உறவுகளை மேம்படுத்தும் வகையில் ஆக்கபூர்வமான சகல நடவடிக்கைகளையும் இந்தியா எடுக்கத் தயாராக உள்ளதாக பிரதமர் வி. பி. சிங் அறிவித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் இந்த இருதரப்பு உறவையும் மேம்படுத்தும் வகையில் பாகிஸ்தான் மேற்கொள்ளும் வலுவான எந்த முயற்சிக்கும் தமது ஒத்துழைப்பு உண்டு என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதே வேளை அடுத்த மாதம் முற்பகுதியில் இந்திய-பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர்களை உள்ளடக்கிய கூட்டமொன்று இஸ்லாமாபாத்தில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டம் இவ்விரு நாடுகளுக்குமிடையில் அண்மைக் காலமாக நிலவி வரும் முறுகல்நிலைமையை மாற்றும் நோக்குடனேயே நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பஞ்சாப், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் அளித்துவரும் ஆதரவு குறித்தே பிரதானமாக ஆராயபபட உள்ளதாகவும் பிரதமர் சிங் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய பிரதமர் சிங் காஷ்மீர் பிரச்சினை குறித்து தாம் மாலைதீவு பிரதமர் கையூமிடம் ஆழமாக விவாதித்ததாகவும் கூறினார்.

இதேவேளை சிந்துமாகாணம் சம்பந்தப்பட்ட விடயத்தில் இந்தியா சம்பந்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கு திரு. வி. பி. சிங் முற்றாக மறுப்புத் தெரிவித்துள்ளதுடன், எந்தவொரு நாட்டின் உள் விவகாரங்களிலும் தலையிடும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை என்றும் கூறினார்.

## பூகம்பத்தால் 50,000 பேர் மரணம்

ஈரானில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பூமியதிர்ச்சிகாரணமாக ஐம்பதினாயிரம் பேர் வரை மரணமாகியிருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கு ஈரான் அறிவித்துள்ளது.

## இந்தியாவின் நாகபாம்பு

சகலஆயுதங்களையும் அழிக்கக்கூடிய ஏவுகணை ஒன்றை இந்தியா நேற்று பரீட்சித்துப் பார்த்துள்ளது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணைக்கு நாகபாம்பு என்று பெயரிடப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

## பிரமப் புத்திராவில் வெள்ளப் பெருக்கு

(அசாம்)

பிரமபுத்திரா நதி பெருக்கெடுத்து உள்ளதைத்தொடர்ந்து வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வெள்ள நிலைமையின் நிமித்தம் ஆயிரக்கணக்கான குடிசைகள் அழிக்கப் பட்டுள்ளதுடன், பயிர்களும் பெருமளவில் சேதமாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

நதியின் நீர் தொடர்ந்து அபாயமட்டத்துக்கு மேலேயே இருந்து வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது.

## இராணுவ அதிகாரிகளின் புதிய முயற்சி

(நியூயோர்க்)

அமெரிக்காவின் இராணுவத்தை சேர்ந்த அதிகாரிகளில் பெரும்பாலானோர் தற்பொழுது சிவில் உத்தியோகத்தில் நாட்டம் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில் பாதுகாப்புக்கான செலவுகள் குறைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இராணுவ அதிகாரிகளின் இந்தப் புதிய முயற்சி என்று கூறப்படுகிறது.

# அயல் நாட்டுஉதவி அவசியமில்லை என்ற கூற்றுக்கு ஈரான் மறுப்பு

(டெஹ்ரான்)

அயல் நாட்டு உதவிகள் எதுவும் தமக்கு அவசியமில்லை என்று கூறப்பட்டதாக முன்பு வெளியான செய்திகளுக்கு ஈரான் அரசு முற்றாக மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஈரான் மதவாதப் போக்குடைய ஒரு நாடு எனினும் எந்தவொரு வல்லரசின் ஆதிபத்தியத்திற்கும் உள்வாங்கப்படாத ஒரு நாடாக இருந்து வந்ததுடன் அமெரிக்கா,பிரிட்டன், ஈராக் ஆகிய நாடுகளுடனும், பாரிய வைராக்கியத்துடனும் இருந்து வந்தது.

இந்நிலையில் ஈரானில் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், ஈராக் ஆகிய நாடுகள் வழங்கும் உதவிகளை ஈரான் ஏற்றுக்கொள்ளுமா? என்ற ஐயப்பாடு அரசியல் வட்டாரங்களில் நிலவியது குறிப்பிடத்தக்கது.

இதனையொட்டி ஈரான் விடுத்துள்ள ஒரு அறிக்கையிலேயே இந்த மறுப்பைத் தெரிவித்துள்ளதுடன் தற்பொழுது ஏற்பட்டுள்ள அழிவு நிலையில் இருந்து மீட்சிபெறும் வகையில் வெளிநாடுகளிலிருந்துஎத்திசையிலிருந்து எந்தவிதமான உதவிகள் வந்தாலும், அவை அனைத்தையும் ஏற்றுக்கொள்ளவுள்ளதாவும் தெரிவித்துள்ளது.

## இலங்கைத் தமிழ் மக்களின்

# ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

(டில்லி)

''இலங்கை தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் அவர்களின் அபிலாசைகளும் தீர்த்து வைக்கப்பட வேண்டும்'' என்று இந்தியப் பிரதமர் திரு வி பி. சிங் தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கான தமது மூன்று நாள் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள பிரதமர் சிங் டில்லி விமான நிலையத்தில் நிருபர்கள் மத்தியில் பேசும் பொழுதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்பொழுது வடக்கு,கிழக்கு பகுதியில் தமிழ் மக்கள் மீது மேற் கொள்ளப்பட்டு வரும் இனபடுகொலைகள் குறித்து செய்தியாளர்கள் மத்தியில் கவலை தெரிவித்த பிரதமர் இந்த நிலைமையை சமாளிக்கும் வகையில் இலங்கை அரசுடன் அரசியல் அடிப்படையிலான முயற்சிகளை இந்தியா தொடர்ந்து மேற் கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அங்கு தொடர்ந்து பேசிய பிரதமர் வி பி. சிங் இலங்கை போராளிகள் இந்தியாவை தளமாக அமைக்கும் நடவடிக்கையை தாம் அங்கீகரிக்கப் போவதில்லை என்று கூறியதுடன், இது குறித்து இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## உலகக் கிண்ணம் 2 ஆம் சுற்று

2 ஆம் சுற்றின் இரண்டாம் நாள் ஆட்டங்கள் இரண்டு முடிவடைந்துள்ளன.

ஆட்டம் 'C' யில் ஆர்ஜென்ரீனா, பிரேசில் அணியை ஒருகோல் போட்டுத் தோற்கடித்தது. ஆட்டம் 'D' யில் மேற்கு ஜேர்மனி ஒல்லாந்தை 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி கண்டுள்ளது.

இதனடிப்படையில், ஏலவே கால் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற கமரூன் செக்கோஸ்லோவாக்கியாவுடன் ஆர்ஜென்ரீனாவும், மேற்கு ஜேர்மனியும் இணைந்து கொள்கின்றன.

பிரேசிலும், ஒல்லாந்தும் தொடர்ந்து ஆடும் தகுதியை இழக்கின்றன.

**இன்றைய ஆட்டங்கள்:**

ஆட்டம் G
ஸ்பானியா - யூகோஸ்லாவியா
ஆட்டம் H
இங்கிலாந்து - பெல்ஜியம்

# அகதிகள் தொகை அதிகரிப்பு

(விசேட நிருபர்)

நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவத் தாக்குதல்களுக்கு இலக்காகி சொந்த இடங்களை விட்டு வெளியேறி கோவில்கள், பாடசாலைகளில் தங்கியுள்ள அகதிகள் மேலும் மேலும் பெருகிக் கொண்டிருக்கின்றனர்.

திருமலைப் பகுதியில் இருந்து யாழ் வந்துள்ள அகதிகளில் 60 குடும்பங்கள் பாஷையூர் அர்ச். அந்தோனியார் பாடசாலையிலும், திருக்கோணமலை, அன்புவழிபுரம் 8 குடும்பங்கள் யாழ். சாள்ஸ் மகாவித்தியாலயத்திலும் தங்கியுள்ளனர்.

காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி பகுதிகளைச் சேர்ந்த 63 குடும்பங்கள் சுன்னாகம் அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் தங்கியுள்ளனர்.

சுன்னாகம் பகுதி இளைஞர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளவர்களின் உணவு. சுகாதாரத் தேவகளை நிறைவேற்றி வருகின்றனர். (21)

## அரசுபாதுகாப்பு நிதி 1 1/2 கோடி!

தேசியபாதுகாப்பு நிதிக்கு நேற்று முன்தினம் மலைவரை ஒருகோடியே ஐம்பத்தாறுலட்சத்து நானூற்று அறுபத்தைந்து ரூபா இருபது சதம் சேர்ந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.


Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## மன்னார் நிலைமை

(கொழும்பு)

மன்னாரில் நேற்று எந்தவித அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்று, பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# மட்டக்களப்பை நோக்கி படைகள் முன்னேறுவதாக ரஞ்சன் தகவல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் மெதுவாகவே முன்னேறி வருவதாக ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணா நேற்று கொழும்பில் செய்தி நிருபர்களிடம் கூறினார்.

தரைக்கண்ணி வெடிகள், வீதித்தடைகள் காரணமாகவே படையினர் மெதுவாக முன்னேறிச் செல்ல வேண்டி உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிரானில் இருந்து மட்டக்களப்பு நோக்கி படையினர் முன்னேறியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்த தரைக்கண்ணிவெடிகளை அகற்றிக் கொண்டுமுன்னேறிச் செல்வதால் ஒருசில படையினர் தமது கால்களை இழக்கவேண்டி உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்முனை பொலிஸ் நிலையங்களையும் மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகிறது இவற்றை மீண்டும் இயங்க வைக்க பொலிஸ் படைப்பிரிவு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

காலக்கிரமத்தில் இந்தப் பொலிஸ் நிலையங்களில் பணியாற்றுவதற்கு அந்தப் பிரதேச வாசிகளை அரசாங்கம் தெரிவு செய்யும்.

அகதிகளுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த அகதிகள் வீடுகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆயுதப் படையினர் 24மணி நேரமும் உஷாராக இருப்பதால் அவர்களுக்கு சமைத்த உணவுப்பார்சல்களை விமான மூலம் போடவேண்டியுள்ளது.

திருக்கோணமலை நகரம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. பல கடைகள் எரிக்கப்பட்டதை நான் நேரில் பார்த்துள்ளேன்.

படையினர் பாரபட்சமின்றி நடந்துகொள்ள வேண்டும். எந்த ஒரு சமூகத்தினருக்கும் தீங்கு இழைக்க வேண்டாம் என்று அமைச்சர் படையினருக்கு எச்சரிக்கை செய்தார். மாங்குளத்தில் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களைபடையினர் எதிர்நோக்க வேண்டியுள்ளது,

கடந்த பதினெட்டு நாட்களாக நடைபெற்ற யுத்தத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தில் நூற்றிமுப்பத்தொருபேர் பலியானதாகவும், இருநூறு பேர் காயமடைந்தனர் எனவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் கொலைசெய்யப்படவில்லை என்றும் அவ்வாறான தகவல்கள் எதுவும் தமக்கு வரவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

சிங்களக் கிராமவாசிகளின் தற்பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வழங்கப் பட்டுள்ளன. நிலைமை சீரானதும் அவை திருப்பிப் பெறப்படும்.

யாழ்ப்பாணம் கோட்டை முகாமை விடுதலைப்புலிகள் முற்றுகையிட்டுள்ளதை விடுவிக்க விமானப் படையும், இராணுவத்தினரும் கூட்டாக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளதாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

யாழ். கோட்டை முகாமில் உள்ள இருநூற்றி இருபத்தைந்து பொலிஸாரும், இராணுவத்தினரும் சிக்கியுள்ளதாகவும் அகிலஇந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

கடந்த பதினைந்து நாட்களாக கோட்டை முகாம் விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டுள்ளது என்றும் அச் செய்தி தெரிவித்தது,

## நாபா குழுவினர் கொலை பற்றி விசாரணை தேவை

(சென்னை)

சென்னையில் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினர் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைக்கு காரணமானவர்கள் தப்பிச் சென்

என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் புலனாய்வுத் துறை முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை இரவு சென்னையில் இடம்பெற்ற ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினரின் கொலைக்கு உபயோகிக்கப்பட்ட வெள்ளை நிற வான் நேற்று பலத்த பாது

## இராமேஸ்வரத்தில் கொள்ளை இல. தமிழர் மீது குற்றச்சாட்டு

இராமேஸ்வரத்திற்கு அண்மையிலுள்ள அரியங்குண்டு என்னுமிடத்தில் ஆயுதம் தாங்கிய இலங்கைத் தமிழரினால் வீடொன்று கொள்ளையடிக்கப்பட்டது.

இராமேஸ்வரத்திற்கும் தங்கச்சிமடத்துக்கும் இடையில் உள்ள இக்கிராமத்தில் திரேசா (88) என்பவரின் வீட்டை கடந்த சனிக்கிழமை இரவு மூன்றுபேர் கதவைத் தட்டினர். திரேசா கதவைத்திறந்த போது தாங்கள் சுங்கப்பரிசோதகர்கள் என்றும், வீட்டிற்குள் தாம் பரிசோதனை மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்து உள்ளேபுகக் கேட்டனர். திரேசா அதற்கு மறுப்புத் தெரிவிக்கையிலே துப்பாக்கியைக் காட்டி மிரட்டிவிட்டு உள்ளே சென்றனர். அங்கு 33 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது. இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ஏ. கே. 47 ரக துப்பாக்கி வைத்திருந்தார்களாம், இலங்கைத் தமிழில் பேசியதாகவும் திரேசா தெரிவித்தார்.

## சிங்கள கிராமவாசிகளுக்கு அரசு வழங்கிய துப்பாக்கிகள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் எல்லைக் கிராமங்களில் வசிக்கும் சிங்கள மக்களுக்குத் துப்பாக்கி வழங்கப்பட்டிருக்கிறதா என்று நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர்

சிங்களக் கிராமவாசிகளுக்குத் துப்பாக்கி வழங்கப்பட்டிருப்பது உண்மைதானென்றும் தற்பாதுகாப்புக்காக வழங்கப் பட்ட இந்த ஆயுதங்கள் பின்னர் அரசிடம் திருப்பி ஒப்படைக்கப்படுமென்றும்

## யாழ் நகரில் குண்டு வீச்சு......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அல்லோல கல்லோலப்பட்டுத் திக்குத்திசை தெரியாமல் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடிக்கொண்டிருந்தனர்.

இத்தனை அல்லோலகல்லோலம் யாழ்நகரில் நடந்தும் இலங்கை வானொலியோ ரூபவாஹினியோ நேற்று மாலைச் செய்தியில் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் இதுபற்றிச் சொல்லவில்லை.

## கோட்டைப்பகுதிக்குவீசியகுண்டு கச்சேரியடியில் வீழ்ந்தது

நேற்று நடைபெற்ற விமானக்குண்டுதாக்குதல்கள் யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் நடைபெற்றதில் கச்சேரியடி (றெயிலவே கடவை) பகுதியில் வீழ்ந்ததில் கண்டி வீதி செல்லப்பா பாலசுப்பிரமணியம் என்பவரது வீடு பலத்த சேதத்திற்கு உள்ளானது.

வீட்டில் இருந்த அவருடன் மேலும் மூவர் காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினர்.

காயமடைந்த நால்வரும் யாழ்-கடற்கரை வீதி றெட் குறோஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

செல்லப்பா பாலசுப்பிரமணியம் (வயது69) செல்வி சுகிர்தம் செல்லப்பா (வயது 71) இவர் படுகாயத்திற்கு ஆளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. முகுந்தன் இராமநாதன் (வயது 19)

இத் தாக்குதலில் கண்டிவீதியில் ஏ. சி. ஜோர்ஜ், ஆர். அரியரட்ணம், ஜே. சத்தியராஜ் ஆகியோரது வீடுகளும், பேரின்பநாயகம் லேனில் ஆர். பாலசுந்தரம் வீடும், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் எஸ். விக்னராஜா, திருமதி ஆர். அழகரெட்ணம் ஆகியோரது வீடுகளும் சேதமடைந்துள்ளன.

## மனோகரராச் சந்திப் பகுதியிலும் கடைகள், வீடுகள் சேதம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆஸ்பத்திரி வீதிக் கிளை, அண்ணா கோப்பி கௌரி றேடர்ஸ் ஆகியனவும்-

யாழ். மனோகரராச் சந்தியில் இருந்து மிட்டாய்க்கடை சந்தி, வை சி. சி. கு சந்தி வரையிலான பல கடைகளும், வீடுகளும் சேதமடைந்ததுடன் தீப்பற்றின.

## மாகிரட் தட்சர் ஈரானுக்கு உதவி

(லண்டன்)

ஈரானில் பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட்தட்சர் விமான மூலம் நிவாரணப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளார்.

ஈரான் - பிரிட்டன் உறவு பாதிக்கப்பட்டிருந்தும் அவர் இந்த உதவியை வழங்கியுள்ளார்.

## மீனவர்களுக்கு வீட்டு வசதி

(கொழும்பு)

நாட்டில் உள்ள வீடில்லாத மீனவக் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்த மீன்பிடி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதே நேரம் வடக்கு கிழக்கு கரையோரப் பகுதிகளில் வாழும் மீனவக் குடும்பங்களின் வீடுகள் கடற்படை கண்போட்டால் தாக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## பலாலிமுகாமிலிருந்து ஷெல் அடி

(வல்வெட்டித்துறை)

வளலாய், தம்பாலை, பலாலி, போன்ற பகுதிகளை

டிக்கைஎடுக்கப்பட்டுவருகிறது இவற்றை மீண்டும் இயங்க வைக்க பொலிஸ் படைப்பிரிவு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

ருக்கு எச்சரிக்கை செய்தார். மாங்குளத்தில் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களைபடையினர் எதிர்நோக்க வேண்டியுள்ளது,

கப்பட்டது.

இராமேஸ்வரத்திற்கும் தங்கச்சிமடத்துக்கும் இடையில் உள்ள இக்கிராமத்தில் திரேசா (88) என்பவரின் வீட்டை சடந்த சனிக்கிழமை இரவு மூன்றுபேர் கதவைத் தட்டினர். திரேசா கதவைத்திறந்த போது தாங்கள் சுங்கப்பரிசோதகர்கள் என்றும், வீட்டிற் ... துப்பாக்கியைக் காட்டி மிரட்டி விட்டு உள்ளே சென்றனர். அங்கு 33 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது. இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ஏ. கே. 47 ரக துப்பாக்கி வைத்திருந்தார்களாம், இலங்கைத் தமிழில் பேசியதாகவும் திரேசா தெரிவித்தார்.

யில் வீழ்ந்ததில் கண்டி வீதி செல்லப்பா பாலசுப்பிரமணியம் என்பவரது வீடு பலத்த சேதத்திற்கு உள்ளானது.

வீட்டில் இருந்த அவருடன் மேலும் மூவர் காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினர்.

காயமடைந்த நால்வரும் யாழ்-கடற்கரை வீதி றெட்குறோஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிறது. முகுந்தன் இராமநாதன் (வயது 19)

இ தாக்குதலில் கண்டிவீதியில் ஏ. சி. ஜோர்ஜ், ஆர். அரியரட்ணம், ஜே. சத்தியராஜ் ஆகியோரது வீடுகளும், பேரின்பநாயகம் லேனில் ஆர். பாலசுந்தரம் வீடும், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் எஸ். விக்னராஜா, திருமதி ஆர். அழகரெட்ணம் ஆகியோரது வீடுகளும் சேதமடைந்துள்ளன.

## வீட்டு வசதி

(கொழும்பு)

நாட்டில் உள்ள வீடில்லாத மீனவக் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்த மீன்பிடி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதே நேரம் வடக்கு கிழக்கு கரையோரப் பகுதிகளில் வாழும் மீனவக் குடும்பங்களின் வீடுகள் கடற்படை கண்போட்டால் தாக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

# நாபா குழுவினர் கொலை பற்றி விசாரணை தேவை

(சென்னை)

சென்னையில் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினர் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைக்கு காரணமானவர்கள் தப்பிச் சென்றதற்கு தமிழக பொலிஸ் தலை இயக்குனரும் உள்துறை செயலாளரும் பொறுப்பு என்றும் அதனால் அவர்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் புலனாய்வுத் துறை முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை இரவு சென்னையில் இடம்பெற்ற ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினரின் கொலைக்கு உபயோகிக்கப்பட்ட வெள்ளை நிற வான் நேற்று பலத்த பாதுகாப்புடன் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த வான் பட்டுக்கோட்டை சின்னமணி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

# சிங்கள கிராமவாசிகளுக்கு அரசு வழங்கிய துப்பாக்கிகள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் எல்லைக் கிராமங்களில் வசிக்கும் சிங்கள மக்களுக்குத் துப்பாக்கி வழங்கப்பட்டிருக்கிறதா என்று நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவிடம் நிருபர் ஒருவர் கேட்டபோது சிங்களக் கிராமவாசிகளுக்குத் துப்பாக்கி வழங்கப்பட்டிருப்பது உண்மைதானென்றும் தற்பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட இந்த ஆயுதங்கள் பின்னர் அரசிடம் திருப்பி ஒப்படைக்கப்படுமென்றும் அமைச்சர் ரஞ்சன் விஜரேத்தினா தெரிவித்தார்.

# மனோகராச் சந்திப் பகுதியிலும் கடைகள், வீடுகள் சேதம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆஸ்பத்திரி வீதிக் கிளை, அண்ணா கோப்பி கௌரி றேடர்ஸ் ஆகியனவும்– யாழ். மனோகராச் சந்தியில் இருந்து மிட்டாய்க்கடை சந்தி, வை சி. சி. கு சந்தி வரையிலான பல கடைகளும், வீடுகளும் சேதமடைந்ததுடன் தீப்பற்றின.

## பலாலிமுகாமிலிருந்து ஷெல் அடி

(வல்வெட்டித்துறை)

வளலாய், தம்பாலை, பலாலி, போன்ற பகுதிகளை நோக்கி கடற்படை பலாலி இராணுவமுகாம், ஹெலி ஆகியன கடுந்தாக்குதல் நடத்தின.

மேற்படி நடவடிக்கைகளால் பல பொது மக்களின் வீடுகள் சேதமானதுடன் பலரின் வீடுகள் எரிந்தன.

கடும் தாக்குதலால் மக்கள் இடம் பெயர்ந்து ஆவாங்கால் புத்தூர், நீர்வேலி போன்ற பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்துள்ளார்கள். (68)

# காஷ்மீர் தீவிரவாதிகளின் முகாம்கள் மூடப்பட்டன

(இஸ்லாமபாத்)

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பயிற்சிஅளிப்பதற்காக பாகிஸ்தானில் அமைக்கப்பட்ட பதின்மூன்று முகாம்கள் மூடப்பட்டு விட்டதாக பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு தெரிவித்துள்ளது.

தெற்காசிய விவகாரங்களை கவனிக்கும் அமெரிக்க வெளியுறவு அதிகாரி ஒருவர் ஏசியன் நியூஸ் இன்ரர்நாஷனல் என்ற செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

இந்தியா தெரிவித்த ஆட்சேபனையை அடுத்தே இந்த முகாம்கள் மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# திருமலை அகதிகளுக்கு உதவி எதுவும் இல்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் இருந்து புடவைக்கட்டுப் பகுதிகளுக்கு அகதிகளாக வந்த தமிழ்க் குடும்பங்களுக்கு எந்த வித உதவிகளும் வழங்கப்படவில்லை.

இதே சமயம் நேற்று முன்தினம் இங்கு வந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா சிங்கள அகதிகளைச் சந்தித்துப் பேசினார்.

# நீண்டகாலப் போருக்கு தயாராகி வருகிறார்கள்

(லண்டன்)

இலங்கையின்வடக்குகிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும்விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் போரில் புலிகளைத் தோற்கடித்து விடலாமென ஸ்ரீலங்கா இராணுவத்தளபதிகள் நம்பினாலும் இது கடினமான விஷயம் என்று கருதப்படுவதாக லண்டன் பி.பி.ஸி. தமிழோசை நேற்றிரவு கூறியது.

பெரும்பாலான தமிழ் மக்கள் தமது தாயகத்தின் தலைநகரமாகக் கருதும் யாழ்ப்பாணத்தினைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக நீண்டகாலப் போராட்டத்துக்குத் தயாராகி வருவதாகவே கருதப்படுவதாகத் தெரிய வருகிறது என்றும் தமிழோசை தெரிவித்தது.

## சாவகச்சேரியில் ஹெலி சுட்டது!

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை சாவகச்சேரி நகரப்பகுதியில் ஹெலியில் இருந்துசரமாரியாகத்துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதனால் கிலிகொண்ட பொதுமக்கள் சிதறி ஓடினர். சிறிது நேரம் நகரில் பதற்றம் நிலவியது.

வேம்பிராய்ப் பகுதியிலும் ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது. இச்சம்பவங்களினால் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை. (மு)

## ஹெலி சூடு பீரங்கித் தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர், ஊர்காவற்றுறை, வல்லை, புத்தூர், உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் நேற்று ஹெலிக்கப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது.

கம்பர்மலை, வல்வெட்டித்துறை, பொலிகண்டி பகுதிகளுக்கு கடலில் இருந்து கடற்படைப் படகு பீரங்கித் தாக்குதல் நடத்தியது.

இந்தக் கடற்பகுதியில் கடற்படைப் படகுகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ள தால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# காபர்வியூ ஹோட்டல் மீது கடற்படை தாக்குதல்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை காபர் வியூ ஹோட்டலுக்கு அருகில் உள்ள ''குவாறி'' பகுதியை நோக்கி கடலில் இருந்து கடற்படையினர் நேற்று பல மணி நேரம் தாக்குதல்களை நடாத்தினர்.

இதே சமயம் ஹெலிகப்டரும் இந்தப்பகுதியில் வட்டமிட்டுச் சுட்டது.

இதேவேளை இங்குள்ள போராளிகளின் இருப்பிடம் மீது கடற்படையினர் தாக்குதல் நடாத்தியதாகவும் இன்னும் சில போராளிகள் இங்கு தங்கியிருப்பதாகவும் அரசாங்கம் நேற்று அறிவித்தது.

### வீடுசேதம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகர் மவுண்கார்மல் வீதி யேசுமணி மகேந்திரன் என்பவரது வீடு பலத்த சேதத்திற்கு உள்ளானது.

வீட்டிலிருந்தவர்கள் அகதிகளாக வெளியேறி இருந்தமையால் உயிர்ச் சேதம் எதுவும் இல்லாமல் தவிர்க்கப்பட்டது. மார்ட்டின் வீதி வேம்படி சந்தியிலும் ஷெல்லொன்று வீழ்ந்து வெடித்தது. (21)

# மூதூரில் இராணுவம் மீது புலிகள் தாக்குதல்

மூதூர் இராணுவ முகாமில் இருந்து நகருக்கு பொருட்கள் எடுக்க வந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தினர்.

இதனையடுத்து படையினர் திரும்பி முகாமுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னரும் இங்கு இவ்வாறு படையினர் வந்து புலிகளின் தாக்குதலால் திரும்பிச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

### அரசஅதிபரைச்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகள் தொடர்பாகவும் உத்தியோக பூர்வ தேவைகளுக்காகவும் தம்மைச் சந்திக்க விரும்புபவர்கள் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் சந்திக்குமாறு யாழ் அரசாங்க அதிபர் திரு.அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார். (மு)

### ஆவணங்களை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் இருந்து பாதுகாப்பான வேறிடங்களில் வைத்து இவ் ஆவணங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு சகல உதவிக் கல்விப்பணிப்பாளர்களையும் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (மு)

## ஹெலி சூடு!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நேற்று இரவு எட்டு மணியளவில் ஹெலிக்கப்ரர் வட்டமிட்டதுடன் கோட்டைப் பகுதியை சுற்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. சுமார் அரை மணி நேரமாக இது இடம் பெற்றது.

# தம்பலகாமம், கிண்ணியா புலிகள் - இராணுவம் மோதல்

(திருகோணமலை)

தம்பலகாமம்பதின்மூன்றாம் கட்டையில் நேற்று முன்தினம் மாலையில் இருந்து நேற்று மாலை வரை சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சண்டையில் ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

கிண்ணியா துறையிலும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையில் நேற்று முன்தினம் மாலை கடும் மோதல்கள் இடம்பெற்றன.

### படகு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை யாழ் பிரதான வீதி மில்க்பார் சந்தியில் விமானக்குண்டு வீசப்பட்ட வீடொன்று பாரிய சேதமடைந்தது.

நேற்று யாழ்நகரப் பகுதியில் தொடர்ந்து காலை நண்பகல் பிற்பகல் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு இதுவரையும் இடம்பெயராமல் தங்கியிருந்த மேலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்து சென்றுகொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (21)

## நல்லூரில் திருமலை அகதிகள்

திருக்கோணமலையிலிருந்து வந்த அகதிகள் நல்லூர் மற்றும் பகுதிகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு இங்குள்ள இடங்கள் தெரியாததால் எங்கேபோவது, எங்கே தங்குவது என்று அலைந்து திரிகின்றனர்.

நேற்று இவர்களில் பலர் நல்லூர் கோயிலில் தங்கியிருந்தனர். மேலும் பலர் நடந்து யாழ்நோக்கி வந்துகொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவர்களில் சிலர் மாற்றுஉடையின்றி வந்ததையும் காணமுடிந்தது.

### சுவர்

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வீதியில் கடந்த சனிக்கிழமை கல், இடம்பெற்றுள்ளது.

இறந்தவர் ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையாவர். இந்த வீடு இந்திய இராணுவ நடவடிக்கையின்போது சேதமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


## தவறிவிட்டது

2 சூட்கேஸ் நீலம். பிறவுண் நிறமுடையது. கேரதீவு துறைமுகத்தில் தவறிவிட்டது, கிடைத்தவர்கள் தயவு செய்து,

N. சுப்பையா,
81, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் முன்)
யாழ்ப்பாணம்

விறகுக்காலையில் ஒப்படைக்கவும். R / 379



## காணவில்லை

எம்மால் அன்பாக வளர்க்கப்பட்ட நாய் ஒன்று (நிறம்- வெள்ளை; கழுத்தில் பட்டி) அத்தியடிப் பகுதியில் காணாமல் போய்விட்டது. யாராவது நாயைக் கண்டால் ஈழநாதம் காரியாலயத்திற்குத் தெரிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (B/1197)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 -ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.